திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, பென்ஷன் கொடுப்பதற்காக சம்பந்தப்பட்ட சட்டத்தைத் திருத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பென்ஷன் கொடுப்பது இருக்கட்டும். முதலில், சர்க்கார் ஊழியர்களுக்குக் கிடைப்பது போலவே அதே ஸ்கேல் ஆப் பே இந்த லோகல் பாடீஸில் வேலை செய்பவர்களுக்கும், அதாவது அதே சம்பள விகிதம் கிடைக்கும்படி செய்ய இந்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : சட்டத்தைத் திருத்துகிறபொழுது, அதனுடைய பரிசீலனையிலே பென்ஷன் கிடைப்பதற்கும் வழி ஏற்படும் என்று சொன்னேனே தவிர, பென்ஷனுக்காகச் சட்டம் திருத்தப்படும் என்று சொல்லவில்லை. கடந்த 20 ஆண்டு காலத்தில் இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படாமல் இருந்ததைக் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று எடுத்துரைக்க விரும்புகிறேன். ஆகவே, சட்டத்தைத் திருத்தியபிறகு, அனைத்தையும் பரிசீலித்து தேவையான முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

திரு. எம். எஸ். மணி : திருச்சி நகராட்சி ஓய்வு பெற்ற சிப்பந்திகளின் சங்கத்துக்கு பென்ஷன் கிடையாது என்று உத்தரவு ஏதாவது அனுப்பப்பட்டிருக்கிறதா ? அப்படியிருந்தால், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இப்பொழுது வேலையில் இருப்பவர்களுக்கே பென்ஷன் கொடுக்கக்கூடிய திட்டம் இன்னும் அமல் நடத்தப்படவில்லை. ஆகவே, ஓய்வு பெற்றவர்களுடைய பிரச்னை இப்பொழுது எழவில்லை.

திரு. எம். பூபதி : ஸ்தல ஸ்தாபன சிப்பந்திகள் என்று சொல்லும்பொழுது நகரசுத்தித் தொழிலாளர்களும் அதில் அடங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : சட்டத்தைத் திருத்துகிறபொழுது பரிசீலிக்கவேண்டிய ஒன்றாகும் அது.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி : நகர பஞ்சாயத்து சிப்பந்திகளுக்கும் பென்ஷன் கொடுப்பது பற்றி சர்க்கார் ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இதைச் செய்து முடித்தவுடன் ஊராட்சி பணியாளர்கள் குறித்தும் அதே போன்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று என்னுடைய மூலக்கேள்விக்கான பதிலில் கூறியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இத்துடன் வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. மு.ப. 10-00

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

(i) தமிழகத்தில் தயாரிக்கப்பட்ட திரைப்படங்களை பம்பாய் நகரத்தில் திரையிட சிவசேனையினர் எதிர்ப்பு.

*__திரு. என். வரதராஜன் :__ தலைவர் அவர்களே, தமிழக சட்ட மன்றத்தின் 42-வது விதிக்கிணங்க அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்கண்ட விஷயத்தைப் பேரவைக்குக் கொண்டு வருகிறேன்—

"சென்னையில் தயாரிக்கப்பட்ட 'ஆத்மி' என்ற இந்தி சினிமா படத்தை பம்பாய் நகர் கணேஷ் தியேட்டரில் காண்பிக்கலாகாது என 1968-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ம் தேதி பம்பாய் சிவசேனை இயக்கத்தினர் ஆர்ப்பாட்டம் செய்து படக்காட்சி ரத்து செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் தயாரிக்கப்பட்ட இந்தி சினிமாவையும்கூட அனுமதிக்கமாட்டோம் என்ற

சிவசேனையினர் இயக்கம், வளர்ந்து வரும் தமிழ் சினிமா தொழிலைப் பாதிப்பதுடன், பிற தென் மாநில மக்களையும் தமிழ் மக்களையும் குறிவைத்துத் தாக்கும் அபாயம் வளர்ந்து வருவது தமிழ் மக்களிடம் கலக்கத்தையும், ஆத்திரத்தையும் உண்டாக்கியுள்ளது. இந்த அவசர, பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை விவாதிப்பதற்குப் பேரவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்கக் கோருகிறேன்.”

தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே தயாரிக்கப்பட்டது என்பதற்காக இந்த சினிமாவை பம்பாய் தியேட்டரில் காட்டக்கூடாது என்று சிவசேனைக்காரர்கள் தடுத்திருப்பதைத் தொடர்ந்து, எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஏற்கெனவே தமிழ்மக்கள், தென் மாநிலமக்கள் தாக்கப்பட்டார்கள். அதைத் தடுக்காமல் மத்திய சர்க்கார் விட்டு வைத்திருப்பதன் காரணமாக, இந்த ஆபத்தான நிலைமை தொடர்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட முன் வருகிறேன். இந்த ஆபத்தை இன்னமும் நீடிக்க விட்டுக்கொண்டு . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : போதும், அமைச்சர் தன்னுடைய கருத்துக்களைச் சொல்வார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் கொண்டு வந்திருக்கிற பிரச்சினை குறித்து இரண்டொரு வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். பம்பாயில் உள்ளவர்கள் தமிழ்நாட்டிலிருந்து அங்கே திரையிடப்பட இருக்கும் தமிழ்ப்படத்தைக்கூட இல்லை, இந்திப்படத்தையே காட்டக்கூடாது என்று தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் தயாரான படம் என்ற காரணத்தால், இந்தி மொழி மீது அவர்களுக்கு உள்ள பற்றினைக் கூட அப்பால் எடுத்து வைத்துவிட்டு, தமிழ் நாட்டில் தயாரான படம் என்கிற காரணத்திற்காக, அதைக் காட்டக்கூடாது என்கிற அளவில் முதலிலே தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள்; அதன் பிறகு இன்றையதினம் அது சம்பந்தப்பட்ட பட அதிபர்களோடு காலையிலே தொடர்பு கொண்டு பேசியதன் பேரில், ஒரு வாரம் அனுமதித்து, நிபந்தனையும் விதித்திருப்பதாகத் தெரிகிறது. தமிழ்ப் படங்களைத் திரையிடக்கூடாது என்று முதலிலே பம்பாயிலே ஆரம்பித்தார்கள், அதன் பிறகு அது கர்நாடகப் பகுதியிலே பரவி, பங்களூரில் கிளர்ச்சி ஏற்பட்டு, வேறு மொழிப் படங்களைக் காட்டக்கூடாது என்று வேறு இடங்களில் கிளர்ச்சிகளுக்கு இவைகளெல்லாம் வித்து இடும் கிளர்ச்சிகளாக அமைந்தன. ஒரு உண்மையை மனத்தில் வைக்கவேண்டும். தமிழ்நாட்டிலே வேறு மொழிப் படங்கள், குறிப்பாக இந்திப் படங்கள் காட்டக்கூடாது என்று மாணவர்களும், மற்றவர்களும் கிளர்ச்சியிலே ஈடுபட்டார்கள். அது ஆகாது, அந்த முறை கூடாது என்று அவர்களுக்கு அரசின் சார்பாகவும், இந்த அரசை நடத்தும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் பல முறை அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அப்படிப் பரவுகின்ற இந்த உணர்ச்சி கட்டுக்கடங்காத நிலைக்கும் போய், பம்பாயிலே, தமிழ்நாட்டிலே தயாரித்த படங்களை காட்டப்படக்கூடாது என்றும், அப்படிக் காட்ட ஒரு நிபந்தனையையும் விதிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இது அந்த மாநில அரசு கவனிக்க வேண்டிய ஒரு விஷயம் என்றாலும், விதிக்கின்ற நிபந்தனை இந்திப் படங்கள் தமிழ்நாட்டில் அனுமதிக்கப்படவேண்டும் என்பதாகும். அவர்கள் நிபந்தனை விதிக்காமலே தமிழக அரசு மாணவர்களுக்கும், மற்றவர்களுக்கும், எடுத்துக்கூறியிருக்கிற யோசனையும் அதுவேதான். இந்தி மொழி வலுவில், கட்டாயப்படுத்தி, திணிக்கப்படும் நிலையில், இந்தி மொழி தமிழர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் என்கிற நிலையில் ஏற்படும் எதிர்க்கின்ற உணர்ச்சியைக் காட்டினாலும், கலை உணர்ச்சியில், மாநிலத்திற்கு மாநிலம் கலை உணர்ச்சிகள் பரவவேண்டும் என்பதில், இஷ்டப்பட்டவர்கள் எந்தப் படத்தை வேண்டுமானாலும் சென்று பார்க்கிறார்கள், காசைக் கொடுத்துப் பார்க்கிறார்கள். அதைத் தடுப்பது ஆகாது என்று முன்பே மாணவர்களுக்கும், மற்றவர்களுக்கும் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது அரும்பியுள்ள நல்ல சூழ்நிலையில், மாணவர்கள் மொழிக் கிளர்ச்சிகளை விட்டு, பெரியவர்கள் கவனிக்கட்டும் என்று

இருக்கும் நிலையில், கல்லூரிகளுக்கும், கலாசாலைகளுக்கும், கல்வி நிலையங்களுக்கும் செல்வது என்கிற நல்ல முடிவை எடுத்து இருக்கிறார்கள். அதையொட்டி இந்திப் படங்கள் காட்டப்படக்கூடாது என்று மாணவர்களால் தடுக்கப்படமாட்டாது என்று நாம் நம்புகின்றோம். இந்திப் படங்கள் திரையிடப்படும். திரைப்படத் துறையினரும், அரங்கு உரிமையாளர்களும் பாதுகாப்பு வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பாதுகாப்பு அளிக்கவேண்டிய நிலையை மாணவர்கள் உருவாக்க மாட்டார்கள் என்கிற நம்பிக்கை இருக்கிறது. அப்படிப் பாதுகாப்புகள் அரங்குகளுக்குத் தேவையென்றால், அதைச் சர்க்கார் அளிக்கத் தயாராகவும் இருக்கிறது.

நான் முன்பே குறிப்பிட்டபடி, பம்பாயில் உள்ள நிலை அந்த மாநிலத்தினுடைய பிரச்சினை. இந்த மாநிலத்தின் அதிகார நடவடிக்கைகளுக்கு உள்ளே அது வராது. ஆகவே, இந்தத் ஒத்திவைப்பு பிரேரணை தேவையில்லை என்ற கருத்தினை தெரிவிக்கிறேன். (திரு. கே. விநாயகம்: ஹியர், ஹியர்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் விளக்கத்தின் மேலும், அவை விதி 50 (10) தெளிவாக இது நம்முடைய அரசாங்கத்தின் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டது என்று கூறுகின்ற காரணத்தாலும் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(ii) கச்சத்தீவில் இலங்கைத் துருப்புகள் ஆக்கிரமிப்பு

திரு. செ. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, தமிழக சட்டப் பேரவை 42-வது விதிகளின்கீழ், கீழ்க்காணும் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை பற்றி விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கக் கோரி முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன்:—

"தமிழ்நாட்டுக்குச் சொந்தமான கச்சத்தீவு என்னும் பகுதியை இலங்கைத் துருப்புகள் ஆக்கிரமிப்புச் செய்திருப்பதால் நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் பேராபத்து".

தலைவர் அவர்களே, இது எப்படி அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மாத்திரம் சொல்லிக்கொண்டு உரையை முடிக்கிறேன்.. .. ..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதைப் பற்றிப் பேச வேண்டாம். அமைச்சர் விளக்கம் சொல்லுவார்கள்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்த விஷயத்தைப் பற்றிப் பேசாமல் இருப்பது நல்லது. சபாநாயகர் முடிவினைக் கேட்டு தலை வணங்குவது நலம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கச்சத்தீவு பற்றிய நிகழ்ச்சி மத்திய சர்க்காரின் பொறுப்பில் இருக்கிறது. வேறொரு சர்க்காரைப் பற்றி நாம் இங்கே விவாதிப்பது கூடாது என்பதற்குத் தீர்ப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

" 'Indians in Ceylon' is a Central subject and questions on it should be addressed to the Central Government. "

என்று 1950-லேயே ஒரு தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

'Central subjects-Enclaves in States and their transfer is a Central subject and questions on it should be addressed to the Central Government.'

என்று மேலும் ஒரு தீர்ப்பு 1950-ல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

'Consent withheld on the ground that the subject-matter relating to another country was to be considered only in the Parliament despite the fact that the House was directly interested in the problem.